## ரிதீமாலியத்த பிரதேச சபை

### 1. நிதிக்கூற்றுக்கள்

#### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூன் 30 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

#### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரிதீமாலியத்த பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

##### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

இறுதி இருப்பினை மதிப்பிடுவதற்கும் கணக்கீடு செய்வதற்கும் பிரயோகித்திருந்த கணக்கீட்டுக் கொள்கை சபையினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

##### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 252-6362 ஆம் இலக்க கெப் வாகனத்தினை திருத்துவதற்காக மீளாய்வாண்டில் ஏற்பட்டிருந்த ரூபா 497,320 செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நீதிமன்ற தண்டப்பணங்கள் மீதான பெறவேண்டிய வருமானம் ரூபா 451,667 ஆல் குறைத்துக் கூறப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டணம் ரூபா 196,695 ஆல் கணக்குகளில் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதனக் கணக்கிற்கான பங்களிப்பு வருமானம் ரூபா 16,290 ஆல் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது.

##### 1.3.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

புரநெகும செயற்திட்டத்திலிருந்து கிடைத்திருந்த அலுவலக உபகரணங்கள் ரூபா 966,699 ஆல் கணக்குகளில் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தன.

##### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவெண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 2,581,809 ஆகக் காணப்பட செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 13,140,599 ஆகக் காணப்பட்டது.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக ரூபா 27,495,630 கூட்டுத்தொகையான இரண்டு சொத்து விடயங்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டில் ரூபா 281,790 நிலுவை கடை வாடகை மற்றும் ரூபா 13,100 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் கோவையின் 218 ஆவது விதி | 2016 ஆம் ஆண்டிற்காக காணி கட்டிட மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| | (i) நிதிப்பிரமாணம் 133 | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 571 | 02 ஆண்டுகளைத் தாண்டிய 01 தொழிலிற்குரிய ரூபா 13,428 வைப்புக்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிகள் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 ஆம் பிரிவு | இடமாற்றம் பெற்றுச்சென்ற 08 ஊழியர் களிடமிருந்து ரூபா 38,662 கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | பொது நிர்வாக அமைச்சின் 09/2009 மற்றும் 09/2009(i) ஆம் இலக்க சுற்றறிக்கைகள் மற்றும் ஊவா மாகாண பிரதம செயலாளரின் 23 செப்தெம்பர் 2016 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | 45 ஊழியர்களிற்காக சபையினால் கைவிரல் அடையாளமிடும் இயந்திரம் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,020,808 ஆகக் காணப்பட்டதுடன், அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,129,421 ஆகக் காணப்பட்டது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமானச் சேகரிப்புச் செயலாற்றல்

2016 சனவரி 01 ஆந் திகதி நிலவிய நிலுவை வருமானத்தை அறவிடுதல் மீதான செயன்முன்னேற்றம் 54 சதவீதம் முதல் 56 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபை பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 2,256,530 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

(அ) பிரதேச சபைக்கு உரித்தான கடை அறைகளில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற 17 ஆட்களிடமிருந்து ரூபா 184,875 நிலுவை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்த 12 கடை உரிமையாளர்களுடன் புதிய உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபைக்குச் சொந்தமான ஆயுர்வேத மருந்தகத்திலுள்ள மருந்தகர் பதவியில் கடமையாற்றுவதற்காக வீதித் தொழிலாளர் ஒருவரின் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

#### குருவிதென்ன மைதானத்திற்கு அருகாமையிலிருந்து மகுலேமட வீதியினை பேணுதல்

பிரதேச சபைகளை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் மேற்படி வீதிக்கு கிரவல் இடுவதற்காக ரூபா 336,202 செலவிடப்பட்டிருந்தது. இந்த வீதிக்காக 119 கன மீற்றருக்கு கிரவல் வழங்குவதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 191,200 செலுத்தப்பட்டிருந்த போதிலும், வீதிக்கு அருகாமையிலிருந்த காணியிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட மண்ணைப் பயன்படுத்தி வீதி செப்பணிடப்பட்டிருந்தது.

### 3.3 திண்மக் கழிவு முகாமைத்துவம்

சபையினால் திண்மக் கழிவு முகாமைத்துவம் மேற்கொள்ளப்படாததுடன் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் அஞ்சா உல்பத மயானத்திற்கு முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீடானது வருமான மற்றும் செலவினக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டில் வருடாந்த கொள்வனவுத் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) கணக்கீடு
(இ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) கடன்கொடுத்தோர் மீதான கட்டுப்பாடு